***கவனிக்க.*** *- 11.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1759 - 2012 මැයි මස 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1759 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 603 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 608 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 602 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.*** *-* (i) *த பேரண்ட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, பெப்புருவரி 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *புலத்சிங்கள ஜனசக்தி மகா சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, பெப்புருவரி 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *இலங்கை நிருவாக அபிவிருத்தி, ஆராய்ச்சி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகையும் விற்பனையும் - 2012/2013

*(2012 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)*

*2012 ஆம் வருடம் ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2013 ஆம் வருடம் ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் வருடம் ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 2007 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு :*

*"................. இலக்கமுள்ள ................. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி"*

*எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2012.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கற்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 2007 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவனவாக இடுதல் வேண்டும்.*

*5. 2012.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கைகாரர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2012.06.05 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.*

*இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.*

*கே. பீ. ரங்கன பிரனாந்து,*
*பிரதேச செயலாளர்,*
*கல்பிட்டி.*

*பிரதேச செயலகம்,*
*கல்பிட்டி.*
*2012.04.24.*

### அட்டவணை

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2012.05.18 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு | 1,000 0 |
| 02 | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2012.05.18 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு | 1,000 0 |

5-396

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

இவ் அறிவித்தலின் மூலம் மோகன் பிரசன்ன நாணயக்கார மற்றும் மஹிசி பண்டுனி நாணயக்கார ஆகிய நாம் இருவரும் 5196 ஆம் இலக்க 2011.01.08 ஆந் திகதியன்று சி. ஐ. த. சி. அமரதுங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தை இத்திகதியிலிருந்து சட்டபூர்வமாக இரத்துச்செய்துகொள்கின்றோம். இப்பத்திரமானது, இலக்கம் 78, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7 எனும் விலாசத்தைச் சேர்ந்த புஸ்பா ரஞ்சனி அமரதுங்க என்பவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் அறிவித்தலின் மூலம் முழுமையாகவும் சட்டபூர்வமாகவும் இரத்துச்செய்யப்படுகின்றது என்பதை அறிவித்துக் கொள்கின்றோம்.

மோகன் பிரசன்ன நாணயக்கார
மற்றும்
மஹிசி பண்டுனி நாணயக்கார.

5-382

---

## அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

தற்போது காலி, இல. 37ஏ, கனம்பிட்டியில் வசிக்கும் எம். எம். அஜ்ஸால் ஆகிய என்னால், இல. 37ஏ, கனம்பிட்டி என்ற இடத்தைச் சேர்ந்த எம். எஸ். எம். சம்ஸ் என்பவரை எனது அற்றோணியாக நியமித்து உறுதிசெய்யும் சட்டத்தரணி எஸ். சீ. சீ. ஆர். குலதிலக்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட 8230 ஆம் இலக்க 2003.10.15 ஆந் திகதிய அற்றோணி தத்துவத்தை 2012, மே மாதம் 1 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் இரத்துச்செய்கிறேன் என இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

மேற்கண்ட அற்றோணி உரிமைத் தத்துவம் கொண்டவராக இருந்த எம். எஸ். எம். சம்ஸ் என்பவரால் என் பெயரிலோ அல்லது எனக்காகவோ மேற்கொள்ளப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

எம். எம். அஜ்ஸால்.

5-383

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : ஆகாஷ் டீ (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 77834
*பதிவுத் திகதி* : 2011.03.17
*பதிவு முகவரி* : இல. 83-ஏ, பலகல வீதி, ஹெந்தளை, வத்தளை

பணிப்பாளர்களின் வேண்டுகோள் பிரகாரம்,

எஸ். டீ. சீ. டி. குலதுங்க,
*செயலாளர்.*

தொலைபேசி இல. : 011-4959838.

5-384

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : டபிள்யு. எல். ஏ. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 75307
*பதிவுத் திகதி* : 2010.11.03
*பதிவு முகவரி* : இல. 36, நிவ் சிட்டி கார்டின், கடபுவன, பிலியந்தலை

*சபையின் கட்டளைப் பிரகாரம்.*

5-411

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : பெர்சில் கெமிக்கல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 78142
*பதிவுத் திகதி* : 2011, ஏப்பிறல் 01
*பதிவு முகவரி* : இல. 66, புனித அந்தோனியார் வீதி, கடலான, மொறட்டுவை

*சபையின் கட்டளைப் பிரகாரம்.*

5-410

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : பான் ஓரியன்ரல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 85569
*பதிவுத் திகதி :* 2012, ஏப்பிறல் 20
*பதிவு முகவரி :* இல. 17/9, எச் லா கிறிஸ்ரா, 7 ஆம் ஒழுங்கை, ஸ்ரீ ஞானேந்திர மாவத்தைக்கு அப்பால், நாவலை

பணிப்பாளர்.

5-400

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர் :* ப்ரொபெப் ட்றேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 84535
*பதிவுத் திகதி :* 27.02.2012
*பதிவு முகவரி :* இல. 10/ 1, ஸ்டேஷன் லேன், உடஹமுல்ல, நுகேகொடை

பணிப்பாளர்.

5-403

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 5(34) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர் :* சேவ் த எலிபன்ற் லங்கா (கரண்ட்டி) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* ஜீ. எல். 2187
*பதிவுத் திகதி :* 2012.04.03
*பதிவு முகவரி :* இல. 28/ 21, வெவத்தன்ன வீதி, கிறீன் வெலி, அம்பிட்டிய, கண்டி

பணிப்பாளர்கள்.

5-404

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர் :* வின்சம் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 85321
*பதிவுத் திகதி :* 2012, ஏப்பிறல் 09
*பதிவு முகவரி :* இல. 157, மொடல் பாம் வீதி, கொழும்பு 8

சபையின் கட்டளைக்கமைவாக.

5-409

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் 2011, மே மாதம் 16 ஆந் திகதி சணச ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் இலக்கம் :* பீவீ 78736
*பதிவு அலுவலகம் :* இல. 12, எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6

சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

5-408

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2009, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி எஸ்டிபிஎல் நோர்த் ஈஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் இலக்கம் :* பீவீ 67143
*பதிவு அலுவலகம் :* இல. 340, 2/ 1, ஆர். ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு 3

சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

5-405

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2010, மே மாதம் 07 ஆந் திகதி சணச சிக்கியூரிடி சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் இலக்கம் :* பீவீ 72226
*பதிவு அலுவலகம் :* இல. 12, எட்மன்டன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6

சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

5-406

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பெயர் மாற்றலுக்கான பொது அறிவித்தல்

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஹெல்த் (பிறைவேட்) லிமிட்டெட்
(முன்னர் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்)

**கம்பனியின் பதிவு இல. பீபி 303பீவீ**

முன்னர் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஏஜென்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற நிறுவனம் தற்போது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 8 ஆம் பிரிவில் ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஹெல்த் (பிறைவேட்) லிமிட்டெட் என 2012.04.23 ஆந் திகதி (கம்பனி பதிவு இலக்கம் பீபி 303 பீவீ) பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பதிவு முகவரி : "ஸ்டுவர்ட் ஹவுஸ்", இலக்கம் 45, சனாதிபதி வீதி, கொழும்பு 1

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
கம்பனிக்கான கம்பனி செயலாளர்கள்.

"ஸ்டுவர்ட் ஹவுஸ்",
இல. 45, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

5-415

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

திருகோணமலை, லவ் ஒழுங்கையில் வதியும் பத்மநாதன் பத்மாவதி ஆகிய என்னால் எனது அற்றோணி தத்துவதாரராக கொழும்பு 13, கதிரேசன் வீதி, இலக்கம் 154/7 முகவரியில் வசிக்கும் சின்னையா சிவகுமார், தேசிய அடையாள அட்டை இலக்கம் : 692312384V என்பவரை நியமித்து வழங்கப்பட்டதும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு மொகமட் யாகூப் மொகமட் சதுர்துர்தீனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 496 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரம் 2012.05.01 முதல் இரத்துச்செய்யப்பட்டு வலுவிழக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

குறிப்பிட்ட 496 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் குறிப்பிடப்பட்ட சின்னையா சிவகுமாரினால் செய்யப்பட்ட செயல்களுக்கும் மற்றும் அனைத்து விடயங்களும் இரத்துச்செய்யப்பட்ட, வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதுடன் அதில் அதிகாரமோ அல்லது வலிதுடமையோ இல்லை.

பத்மநாதன் பத்மாவதி.

5-407

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : இன்பினிரி பீச் விலாஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 85438
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012.04.09
பதிவு முகவரி : இல. 220/1, டொரிங்டன் எவெனியூ, கொழும்பு 7

சபையின் கட்டளைக்கமைவாக,

எல். எம். மெனேஜ்மென்ட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

ஹெவ்லொக் பூங்கா,
ஹெவ்லொக் வீதி,

5-438

---

## கம்பனியொன்றைக் கூட்டிணைத்தல் பற்றிய பகிரங்க அறிவித்தல்

இவ்வறிவித்தல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஜோன் கீல்ஸ் புரொபர்டீஸ் ஜா-எல (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 76068
கூட்டிணைக்கும் திகதி : 2011, திசெம்பர் 15
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 130, கிளெனி வீதி, கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

கீல்ஸ் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

5-447

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : பய்லிவிக் ஏக்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 85302
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012, ஏப்பிறல் 03
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 2/184, மந்தை தோட்டம், பலத்தோட்டை வீதி, களுத்துறை தெற்கு

கம்பனி செயலாளர்.

5-479

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

யுங் யூன் டெக்ஸ்டைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

**கம்பனியின் பதிவு இல. பீவீ 7104**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் சரத்துக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2012 ஆம் ஆண்டு ஆனி மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ் நிறுவனத்தின் "போர்ட் ரூம்" இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது :-

(1) ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
(2) கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
(3) இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்,
யுங் யூன் டெக்ஸ்டைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கலைப்பாளர்கள்.

2012, வைகாசி 04.

5-498

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின்கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2012, சித்திரை 17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : சணச மீடியா நெட்வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 85515
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 12, எட்மன்ரன் றோட், கிருலப்பனை

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

5-500

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) விதிகளின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : க்யூபா (தனியார்) நிறுவனம்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2012.04.18
கம்பனியின் இலக்கம் : பீவீ 85523
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 79பி, தேவால வீதி, நுகேகொடை

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

5-515

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 242 ஆம் பிரிவிற்கு அமைவான ஒருங்கிணைப்பு

**யுனைட்டெட் சிலோன் இன்சூரன்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்**
(கம்பனி இல. பீபி 1026 பீவீ)

**அலுடெக் அனோடைசிங் அன்ட் மெஷின் டூல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
(கம்பனி இல. பீவீ 539)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் ("அதிகாரச் சட்டம்") 244(3) ஆம் பிரிவிற்கு அமைய இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது. கம்பனி இலக்கம் பீபி 1026 பீவீ இன்கீழ் கூட்டிணைக்கப்பட்ட யுனைட்டெட் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி இலக்கம் பீவீ 539 இன்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அலுடெக் அனோடைசிங் அன்ட் மெஷின் டூல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்பன அதிகாரச் சட்டத்தின் 242 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, அலுடெக் அனோடைசிங் அன்ட் மெஷின் டூல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட இரு கம்பனிகளும் அதிகாரச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைய ஒருங்கிணைப்பு நடைமுறைகளைப் பூர்த்திசெய்துள்ளன.

அதிகாரச் சட்டத்தின் 244 (1) (எ) பிரிவுக்கு அமைய, கம்பனிகள் பதிவாளர் நாயகம் 2012, மாச்சு 22 ஆந் திகதி ஒருங்கிணைப்புச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, மாச்சு 26.

5-509

---

**பகிரங்க அறிவித்தல்**

ஹேகெம் (பிறைவேட்) லிமிட்டெட்
(கம்பனி இல. பீபி 738 பீவீ),

ஹேலீஸ் எக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
(கம்பனி இல. பீபி 575)

ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு

பீபி 738 பீவீ என்ற கம்பனி இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹேகெம் (பிறைவேட்) லிமிட்டெட் பீபி 575 என்ற கம்பனி இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹேலீஸ் எக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்டும் அதிகாரச் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கேற்ப ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்படும் என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் ("அதிகாரச் சட்டம்") 242(3)பி ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனி ஹேலீஸ் எக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் என்று அழைக்கப்படும். இந்த ஒருங்கிணைப்பு 2012, மே 31 ஆந் திகதியில் அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியான ஹேலீஸ் எக்றிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்டின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைப்பை அங்கீரிக்கும் தீர்மானம் அதிகாரச் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கு அமைய ஒருங்கிணைப்புப் பிரேரணையாகக் கருதப்படுகின்றது. இந்த ஆவணத்தை, ஒருங்கிணைக்கப்படும் கம்பனியொன்றின் எவரேனுமொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது உரிமையுள்ள எவரேனுமொருவர் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 இல் அமைந்துள்ள ஒருங்கிணைக்கப்படும் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் வழமையான அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு,
2012, ஏப்பிறல் 26.

5-510

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிங்க அறிவித்தல்**

டிஷ் டிவி லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

டிஷ் டிவி லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி பீவீ 85639 என்ற இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய, இல. 181-1/1 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

இஎம் அன்ட் இஎன் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனியின் கம்பனி செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்.

5-512

---

**வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்**

எக்ஸ்பலோஜிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனி 2012, மாச்சு 22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எக்ஸ்பலோஜிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 84960

*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2012, மாச்சு 22

சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேவிசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2012, மாச்சு 30.

5-508

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : சுரடோ கெம்பஸ் ஒப் பிசினெஸ் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 84584

*பதிவுத் திகதி* : இல. 29.02.2012

*பதிவு முகவரி* : இல. 130/ஏ, காலி வீதி, தெஹிவளை

(1) பொல்வத்த சிரியாலாகே ரஜித்த புத்திக,
(2) பிரசாத் சுமிந்த களுஆராச்சி,
(3) ஹென்னாயக்க முதியான்சேலாகே லுவிரங்க பமுதிக பண்டார ஹென்னாயக்க
பணிப்பாளர்கள்.

5-499

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : டேசேர்ட் அன்ட் சீ ஹொறிசோன் ட்றேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 83028

*பதிவுத் திகதி* : 2011, திசெம்பர் 15

*பதிவு முகவரி* : இல. 6பி1/1, காசப்பா வீதி, கொழும்பு 5

சார்ட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-484/1

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : கே. எம். எல். ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 84902

*பதிவுத் திகதி* : 2012, மாச்சு 15

*பதிவு முகவரி* : இல. 52, கிருலப்பனை அவெனியு, கொழும்பு 5

சார்ட் பிசினெஸ் சிஸ்டெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

5-484/2

# ஏல விற்பனை

**செலான் வங்கி பீஎல்சீ – நுகேகொடை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*('கடன்பட்டோர்' என்ற வகையில் பத்தரமுல்லையைச் சேர்ந்த விந்தியா நிலக்சி ரூபசிங்க மற்றும் ஹங்கிடி ஹெதர குயின்டஸ் ஆரியரட்ன என்பவர்களுக்காக பத்தரமுல்லையில் வியாபாரப் பதிவு இல. என்(பிவிஎஸ்) 22183 ஐக் கொண்டுள்ள 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் ஒழுங்காகக் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனியாகிய 'வேய் மாஸ்டர் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்' இற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள்)*

முதலாவது ஏல விற்பனை

**பத்தரமுல்ல நகரசபை எல்லைக்குட்பட்ட வரிமதிப்பீட்டு இல. 97/9 மற்றும் 97/10 (புதிய இல. 97/16 மற்றும் 97/17) கடுவலை வீதி, பத்தரமுல்லை எட்டு தசம் ஒன்பது ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.96பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2012, யூன் 08 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**இரண்டாவது ஏல விற்பனை**

**வரிமதிப்பீட்டு இல. 97/5, கடுவலை வீதி, பத்தரமுல்லை பத்து தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.95பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

***வழிமுறை உரிமை அதன் மீதாகவும் அத்துடன் அதனூடாகவும், அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ. எவ். யாப்பா என்பவரினால் தயாரிக்கப்பட்டு 1975.07.04 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 372/சீஎச்/டீ/1/685/810 இன் துண்டுகள் 4, 5 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. (அத்துடன் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்டு 1977.09.24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 2150 இல் துண்டு 4 இல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.)***

*மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2012, யூன் 08 ஆந் திகதி மு. ப. 10.45 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

***காணிக்குச் செல்லும் விதம்.***- *பத்தரமுல்லை பிரதான பஸ் தரிப்பிடத்திலிருந்து கடுவலை வீதி மார்க்கமாக 100 யார் தொலைவில் சென்று இடதுபக்கமாக உள்ள லியோநாட் பெரேரா மாவத்தையால் திரும்பிச் சென்று அங்கிருந்து 100 யார் தொலைவில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்திருக்கும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2012.03.02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2012.02.23 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2012.02.21 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் *ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :*

*(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி, (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.*

*காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வை யிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456482, 2456487.*

*துசித கருணாரத்ன (ச. நீ.),*
*அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும்*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*ரி. அன்ட் எச். ஒக்சன்,*
*இல. : 50/3, விஹார மாவத்தை,*
*கொலொன்னாவ.*
*தொலைபேசி : 011-3068185, 011-2572940.*

*5-476*

***செலான் வங்கி பீஎல்சீ — களுத்துறை கிளை***

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை பாலதோட்ட வில் அமைந்துள்ள பெறுமதிவாய்ந்த குடியிருப்புக்கு உகந்த சொத்து ஒரு றூட் பதினெட்டு தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 18.2பே.) அல்லது 0.1471 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

*('கடன்பட்டோர்' என்ற வகையில் களுத்துறை தெற்கைச் சேர்ந்த மெஸர்ஸ் சன்தீப பந்துல ட்ரான்ஸ்போட்டர்ஸ் அன்ட் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் மாதுரஹே உபாலி திஸநாயக்க மாதுரஹே டொன் அனுரா திஸநாயக்க, மாதுரஹே நிமால் சந்திர திஸாநாயக்க மாதுரகே மாலினி திஸாநாயக்க என்பவர்களுக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

*மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2012, யூன் 12 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணிக்குச் செல்லும் விதம்.**- *களுத்துறை மணிக்கூட்டு கோபுரத்தி லிருந்து பாலத்தோட்ட வீதி மார்க்கமாக 1.6 கி. மீ. சென்று வலதுபுறமாக வரும் பீஎஸ் வீதியினால் தொடர்ந்து 30 மீற்றர் சென்றால் இடதுபுறத்தில் வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாதை வழியாக சுமார் 50 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து வலது கைப்பக்கத்தில் அமைந் திருக்கும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2009.12.11 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.12.02 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" பத்திரிகைகளையும் 2009.12.29 ஆந் திகதிய "தினக்குரல்" பத்திரிகையையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் *ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி, (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.*

*காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான்*

டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பார்வை யிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456472, 2456487.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-3068185, 011-2572940.

5-478

---

### செலான் வங்கி பீஎல்சீ – அபிவிருத்தி வங்கிக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**சொத்து ஏல விற்பனை**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் கெசல்வத்த, பாணந் துறை-தோட்டமுனவில் கொரட்டுதூவ வரிமதிப்பீட்டு இல. 12/8, கனவிமல ஒழுங்கையில் அமைந்துள்ள பெறுமதிவாய்ந்த சொத்து அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள் மற்றும் அனைத்துட னும் ஆறு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6.12பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.**

*('கடன்பட்டோர்' என்ற வகையில் மொரட்டுவையைச் சேர்ந்த லியனரலாலஹே நந்தாவதி மற்றும் சமரக்கோன் முதியன்சலாஹே அசங்க ஸ்ரீநாத் என்பவர்களுக்காக வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2012, யூன் 12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- கொழும்பு-காலி (முன்னைய) வீதி மார்க்கமாக மொரட்டுவை புகையிரத நிலைய சந்தியிலிருந்து பழைய வீதியால் 400 மீ. தொலைவில் உள்ள டிஹோரல்ல பாலம் வரை சென்று அங்கிருந்து 200 மீ. தொலைவில் வாகன எண்ணெய் நிரப்பும் நிலையம் அமைந்திருக்கும். எண்ணெய் நிரப்பும் நிலையத்தின் இடதுபக்கத்தில் பொதுமக்கள் பாவனையான கணவிமல மாவத்தை அமைந்துள்ளது. கணவிமல மாவத்தையால் 250 மீ. தொலைவில் வலதுபக்கத்தில் கணவிமல ஒழுங்கை அமைந்துள்ளது. கணவிமல ஒழுங்கையால் 150 மீ. தொலைவில் 20 அடி அகலமான செப்பனிடப்படாத வீதிக்காக ஒதுக்கப்பட்ட பாதை அமைந்துள்ளது. அப்பாதையால் 150 மீ. சென்றால் குறிக்கப்பட்ட சொத்து ஒதுக்கப்பட்ட வீதியின் இடதுகை பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2010.08.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2010.08.21 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2010.08.18 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), (2) உள்ளூர் அதிகாரசபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி, (3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீ. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பார்வை யிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456472, 2456487.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 011-3068185, 011-2572940.

5-477

---

### தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் இலக்கம் 4 ஐக் கொண்ட வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆவது பிரிவின்கீழ் (திருத்தப்பட்ட) 2011 ஆம் ஆண்டின் இலக்கம் 1 உடைய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழான விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்குச் சொந்தமான பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை**

**மேல் மாகாணம், கம்பா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம பத்துவின் வத்தளை-மாபோலை நகரசபை எல்லைக்குட்பட்ட வத்தளை-நீர்கொழும்பு வீதியில், மதிப்பீட்டிலக்கம் 530/13 என்ற இடத்தில் அமைந்துள்ள ''கந்தகஹவத்த மதடியகஹகும்புற (ஒவிட) அல்லது மதடியகஹகும்புற என அழைக்கப்படுகின்ற உத்தரவு பெற்ற நிலஅளவை யாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா அவர்களினால் ஆக்கப்பெற்ற 1993.07.03 ஆந் திகதியிடப்பட்ட 3089 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 6 என அடையாளமிடப்பட்டது மான 8.3 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க காணித் துண்டின் ஏல விற்பனை**

*(இவ்வாதனம் இல. 123-1/1, வனவாசல வீதி, களனியை வசிப்பிட மாகக் கொண்ட திரு. சுப்பிரமணியம் மணிமாறன், இஹல ஆராய்ச்சி லாகே தொன் இனோகா தினாலி நாணயக்கார ஆகியோரினால் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாதனம் நொத்தாரிசு கே. பலிஹக்கார அவர்களினது 2008.08.06 ஆந் திகதி கொண்ட இலக்கம் 8228 உடைய ஈட்டுமுறி மூலம் வங்கியில் ஈடுவைக்கப்பட்டுள்ளன.)*

**ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம பத்துவின் வத்தளை-மாபோல நகரசபை எல்லைக்குட்பட்ட வத்தளையில் அமைந்துள்ள மதிப்பீட்டிலக்கம் 530/13 என்ற இடத்தில் அமைந்துள்ள "கந்தகஹவத்த மதடியகஹகும்புற (ஒவிட) என அழைக்கப்படுகின்ற மதடியகஹகும்புற என்றழைக்கப்படும் காணியும் அதில் நிற்கின்ற சகலதும் உள்ளடங்கலாகவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா அவர்களினால் ஆக்கப்பெற்ற 1993.07.03 ஆந் திகதியிடப்பட்ட 3089 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 6 என அடையாளமிடப்பட்டதும்- வடக்கில் : அதே காணியின் துண்டுகள் 3 ஐயும் 5 ஐயும் ; கிழக்கில் : நீர் வழியையும் ; தெற்கில் : ஜே. என். ஜயலத்திற்குச் சொந்தமான காணியையும் ; மேற்கில் : அதே காணியில் உள்ள துண்டு 7 ஐயும் எல்லைகளாகக் காட்டுவதும், 8.3 பேர்ச்சஸ் (0ஏ. 0று. 8.3பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி. இக்காணி கொழும்பு காணிகளைப் பதிவுசெய்யும் அலுவலகத்தில் இலக்கம் பீ1004/166 ஐக் கொண்ட கோவையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாதனத்திற்குள் பிரவேசிப்பதற்காக மேற்கூறப்பட்ட இலக்கம் 3089 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 3 என அடையாளமிடப்பட்டுள்ள 10 அடி அகலம் கொண்ட பாதையும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிரி லியனசூரிய அவர்களினால் அளவிட்டு ஆக்கப்பட்ட 1972.01.29 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 530 ஐக் கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இலக்கம் 6 மற்றும் இலக்கம் ஏ2 ஐக் கொண்ட துண்டுகளுக்கான பாதை உரிமைகளையும் கொண்டுள்ளது.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**.- கொழும்பிலிருந்து பேலியகொடை புத்தசிலை சந்திவரை சென்று, அங்கிருந்து தொடர்ந்து நீர்கொழும்பு வீதியில் 3.85 கிலோமீற்றர் வரை சென்று வத்தளை மணிக்கூட்டு கோபுரத்தைத் தாண்டி அதே வீதியில் மேலும் தொடர்ந்து 425 மீற்றர் தூரம்வரை சென்று வலதுபக்கம் திரும்பும்போது றைன்போவ் உணவு விடுதி தென்படும். அதைத் தாண்டிச் செல்லும் வலதுபக்கமாக உள்ள தார் கொங்ரீட் வீதியில் 100 மீற்றர் தூரம் சென்று மீண்டும் வலதுபக்கமாகத் திரும்பி கொங்ரீட் பாதையில் 25 மீட்டர் அளவில் செல்கின்றபோது இடதுபக்கமாகவுள்ள பாதை ஒதுக்கில் 5 மீற்றர் அதே பாதையில் முன்னால் செல்ல இவ் ஆதனத்தை அடைய முடியும். இது வீதியில் வலது ஓரத்தில் காணப்படுகின்றது.

இவ்வாதனம், பகிரங்க ஏல மூலம் 2012, யூன் 7 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம்**.- ஏலத்தைப் பெற்ற கொள்வனவுகாரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் கொடுப்பனவு களை காசாகக் கொடுக்க வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;
(3) ஏலதாரர் தரகராக கொள்வனவு விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 1,17,050 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைக் கட்டணம் ரூபா 750

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தொடர்புகொள்ள வேண்டியவர் :

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி.

இல. 255, காலி வீதி,
கொழும்பு 3,
தொலைபேசி இல. : 011-2576132.

5-482

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.